

# "சொல் அற, சும்மா, சுகமா, இரு"!!!

இதழ் I

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “சொல் அரு, சும்மா, சுமா, இரு!!!”

# பொருளடக்கம்


1. சொல்லற சும்மா சுகமாயிரு


ரகஸ்ய விளக்கம்----------------------------------------------உ




உ

பிரணவத்திடல் மேல் உள்ள
வாசகங்கள்; முன் & பின்!
என அமைந்திருக்கும்!
அவைகளை சிரத்தையுடன்
உணரவும்!

எல்லாம் நீ!



ஸத்தியவாக்கு (1)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"ஸ்ரீ குரு திருவடி துணை!" "நம்பினோர் கெடுவதில்லை!"

"தெய்வம் மனுஷ்யரூபேண!" "யத்பாவம் தத் பவதி!"

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!"

"ஆத்திரம் அறிவு நாசம்!" "கோபம் சண்டாளன்!"

"பொறுமையே பூஷணம்!" "பொறுமையே கவசம்!"

"விட்டுக்கொடுத்தால் சுதந்திரம்!" "நன்மையே தவிர தீமை இல்லை!"

"எதையும் நலமே என ஏற்றுக்கொள்!" "ஆனந்தம் அடைவாய்!"

"வாக்கே வாழ்க்கை!" "பயமே பலிதம்!" "வாக்கே அக்கினி!"

"வாக்கே அமிர்தம்!" "வாக்கே சாதனை!" "கற்பனையே பயத்துக்கம்!"

"பதறாத காரியம் சிதறாது!" "இரையை தேடாதே!" "இறைவனை தேடு!"

"உன்னை காக்க சினம் தவிர்!" "சினம் வந்தால் உன்னை கொல்லும்!"

"தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்பவன் மனிதன்!" "மன்னிப்பு கொடுப்பவன் இறைவன்!" "நாணல் போல் பணிய கற்றுக்கொள்!"

"நீ அடங்கினால் உலகம் உன்னுள் அடங்கும்!" "நீ அடக்கினால் உலகம் உன்னை, அடக்கி அழித்து விடும்!" "மதிப்பு மரியாதை கொடுத்தால் மதிப்பு மரியாதை கிடைக்கும்!" "அன்பினால் உலகை வெல்லலாம்!" அதிகாரத்தால் உன்னையே அழிக்கலாம்!

ஸ்ரீ பாபா



உ

சொல்லும் பொருளும் அற்று சும்மா இருந்து வைத்தான் குருநாதனை யாம் அறியோம் அம்.மா பொருள் ஏது என அடைய விழுந் திகைத்தும் என்பது, எம் ஶ்ரீ பட்டினத்தடிகள் வாக்காகும். இப்பொருள் அதுவே யாம்! யாமே அது! அதுவே எல்லாம்!

இந்த நிலை பெறுவதற்கு, சொல் அற சும்மா இரு.
அதாவது வாக்கை மனதில் ஒடுக்கு! மனதை அறிவில் மய மாக்கு! அங்கு அறிவு, தானே பேரறிவாய் மாறி விடும்!

இதன் சாதனை?
(1) சர்வார்ப்பணம்! (2) பிரம்மார்ப்பணமும் பேஷும்

# ரகஸ்ய விளக்கம்!

(1) காலாதீதமான பர சொரூபமே, தான் தானே, விளையாடும் நிமித்தம், தாமே செயலற்ற பர மாகவும், தாமே செயலுற்ற ஶ்ரீ பகவானாகவும், விளையாடும் பதுமைகளாகிய, ஜீவ சொரூப மாகவும், ஆக்கிக் கொண்டு, (பரதத்துவம்) ஆனந்தம் பொங்க, விளையாடிக் கொண்டிருக் கிறது. அதை ஆனந்த தாண்டவம் என, ஶ்ரீ மஹான்கள் சொல்வர். ஆனால் மனம் வசம், அகப்பட்ட மாந்தர், அதை இன்ப துன்ப, புண்ணிய பாபமாக கொள்வர். இதை அறிவு சொரூபமாக,




(௩)

சொல் அற
சும்மாவே
சுகமாவே இரு :—
சொல் அற :—
பேச்சைக் குறை!
சும்மாவே = விட்டுக்கொடு
சகித்துக் கொள்! சுகமாவே இரு
**பொறுமையாய் இரு.**

இருந்து உணர்ந்தால்தான், ஆனந்தம் தோன்றும்.
அந்த ஆனந்தம் என்பது:
வாக்கை மனதில் ஒடுக்கி! மனதை அறிவில்
லயமாக்கி! அவ்வறிவை பேரறிவாய் மாற்றினால்
மட்டும் முடியும். இதன் சாதனை பேச்சைக் குறை!
விட்டுக்கொடு! சகித்துக் கொள்! பொறுமையாய்
இரு! (சொல் அற சும்மா சுகமாயிரு!)

(௨) உன் அறிவே ஆன்மா! உன் ஆன்மாவே அறிவு!
அந்த அறிவு செயலற்ற நிலையில் ஸத் ஆகும்!
” ” செயலுற்ற நிலையில் ஸித் என்ற நிலையில்;
ஈசன் என்ற ஸ்ரீபகவான் ஆகிறது.
அந்த அறிவே, நடிப்பு என்ற, விளையாட்டின் நிலையில்,
தாம் ஆனந்தமாக இருந்தாலும், மாயா மனதின்
உறவினால், இன்ப துன்ப/புண்ணிய பாபமாகத்;
அனுபவிக்கும் நிலையில், பந்த ஜீவனை தோற்றுவிக்கிறது
இவைகளை உணர வேண்டுமானால்; பேச்சைக் குறை!
விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாய் இரு!
(சொல் அற சும்மா சுகமாயிரு!)



(4)

(3) ஆன்மாவே ஸத்தியம்! நித்தியம்! ஆகும்!
மாயாவின் மகனை மனமானது, தம் கற்பனையால்
நான்! என்னை! எனது! என்ற எண்ணத்தால்,
போர்த்திய போர்வையே, ஓர் ஜீவனை தோற்றுகிறது.
ஆகவே பிரம்மம் வேறு! ஆன்மா வேறு! நாம் வேறு!
அல்ல! அல்ல! அல்ல!! இதை உணர் பேச்சை குறை!
விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாய் இரு!
(சொல் அற சும்மா சுகமாயிரு)

(4) பரசொரூபமாகிய ஆன்மாவே, அகில புவனங்க
ளாகவும்! புவன கிரி கர்த்தாக்களாகவும்!
தாம் தாமே ஆனது! ஆனவை தோன்றித் தோற்றும்!
**நாமரூபம்** (சூட்சுமமோ! ஸ்தூலமோ!)
அனைத்தும், மனமய கற்பனை வடிவம். அவை பொய் ஆகும்.
அதுவே நாம் என்ற, அறிவின் ஆனந்த வடிவே நாம் ஆகும்.
நாமரூபமாண்டம் பொய்! அது தோன்றிய மண்ணே ஸத்தியம்!
இதை ஆழ்ந்த அமைதியுடன் உணர், பேச்சை குறை!
விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாய் இரு!
(சொல் அற சும்மா சுகமாயிரு)



௫

மண்ணை உணர்ந்தால் நாமமட்டுமே உண்டு. பாண்டமாக கண்டால் நாமமும், ரூபமும் உண்டு. மண்ணாக உணர்வது அறிவு. பாண்டமாக காண்பது மாயா மனம்.

(௫) அந்த ஒன்றுக்கு ஆதியும்! அந்தமும்! இல்லை!


**நாமரூப** தோற்றமும்! இருப்பும்! இல்லை!

தோற்றம் என ஒன்றில்லாததனால், சொந்த பந்தம்! இல்லை. பந்தம் இல்லாத்தன்மையினால், மோக்ஷமும் இல்லை. அது அதுவாகவே இருக்கிறது! அதுவே நாமாகவும் இருக்கிறோம். இதை உள்ளபடி உணர, பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)

(6) முன் பல ஜன்மாவில், பலன் கருதாமல் செய்த, கர்ம தர்ம பலன்களால், இச் ஜன்மாவில், எம்முடைய ஞான சாதனைமாகிய: (A) விவேகம்! (B) வைராக்கியம் (C) சமம்/ சமாதானம்! சிரத்தை! (D) முமுக்ஷுத்வம்! முதலிய சாதனையால், எமக்கு அயலாக எதுவும் இல்லாத, எல்லாம் ஒன்றே! அதுவே நாமான, நிலை பெற்றோம். இவ்வத்த அனுபவம் பெற, பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு.

(சொல் அற சும்மா சுகமாயிரு)




(6)

(7) பேசிப் பேசியே! பேசிப் பேசியே! பேசிப் பேசியே!
இவ்வாறு நாமரூப, ஜகத் ஜீவர்களுக்கு, இருப்பைக் கொடுத்தோம்.
அங்கு பந்தாகிய! பித்தே!
சித்தமாகத் தோன்றி, அந்த இருப்பைக் கொடுத்து,
பேச்சைக் குறைத்தோம்! விட்டுக் கொடுத்தோம்!
எதையும் சகித்துக் கொண்டோம்! மிக, மிக, மிக, மிக,
பொறுமையாய் இருந்தோம்!

(சொல் அற சும்மா சுகமாக இருக்கிறோம்)

(8) மனம்! புத்தி! சித்தக்கிளை! கற்பனவடிவில்,
தோன்றிய **நாமரூப** ஜகத் ஜீவ தோற்றம்,
கயிற்றில், எம் கவனக் குறைவால், தோன்றிய
அரவம் என, உணர்ந்தோம்! அதுபோலவே சக்தியின்
பொருளும் இல்லை! சித்தத்தின் வாக்கும் இல்லை!
பொருளும் வாக்கும், இவ்வாறு தன்மையிலே, அவற்றின்
தொடரும், துவைத பயமும் இல்லை! இந்நிலை எப்படி
கிடைக்கிறது என்றால்? பேச்சைக் குறைத்தோம்!
விட்டுக் கொடுத்தோம்! எதையும் சகித்துக் கொண்டோம்!
பொறுமையாகவே இருந்தோம்!

(சொல் அற சும்மா சுகமாக இருக்கிறோம்)



(10) நாமரூப ஜகஜீவ, பொருள் உறவுகள் அனைத்தும், எண்ண வடிவில், தோன்றுவதே, ஜனனமரண சந்தேக கலக்க, பய துக்கமாகும்! மேலே கூறியவைகளின், எண்ணங்கள் எந்த விநாடி தோற்றமும்! எழுச்சியும்! வீழ்ச்சியும்! ஆகாமல், அமைதியின் ஆனந்தம், இயல்பாகவும், ஸாஸ்வதமாகவும் ஆகிறதோ, அந்த விநாடியே, ஜனனமரண, பயதுக்கம் நாசம் ஆகி, பிரம்மானந்தம் பெறுகிறாய். இந்நிலை பெற, பேச்சைக் குறை விட்டுக் கொடு! எதையும் சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமா இரு)

(11) காண்பவனாக இரு! காட்சியாக இராதே! அதாவது ஆத்மா செயலற்றதாக இருப்பதால், ஸ்ரீ மகத்தாக இரு. அகிலம் உன் சிருஷ்டியாகட்டும்! உன் சிருஷ்டியானால் அன்பு. பிறர் சிருஷ்டியானால் பாசம்! அன்பு = மோக்ஷம்! பாசம் = ஜனனமரணம்! நமக்கு அன்னியம், எதுவும் இல்லாமல், எல்லாம் நாமாகும், நிலை பெறவேண்டுமானால். பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமா இரு)



(12) அது வேறும், நமக்கு அன்னியம், எதையும் எதுவும்,
இல்லவே இல்லை. நமக்கு அன்னியமாய், தோற்றுகிறதே
என்றால்? சர்வார்ப்பணம், உன்னிடம் பரிபூரணமாகவில்லை
ஆகவே உன்னிடம், மனம் கள்ளத்தனம், செய்கிறது.
இதற்கு சாதனையாளர்கள் அனைவரும், ஸ்ரீபகவான்
கருணை பெற வேண்டும். கருணை பெற! பேச்சைக் குறை!
விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)

(13) மனம்! புத்தி! சித்தம்! தோற்றினை அங்கு ஸித்
சொரூபமே, அவ்வாறு தோற்றுகிறது! அவ்வாறு
தோற்றும் போது, அதுவே, ஜகஜீவ, உறவு சுற்றம்.
அதனைவரும் சொந்த, பந்த, பாசம் பற்று பின்னிப்பிணைந்து
மனம் விளையாடுவதால், சஞ்சலம் துக்கம் தோற்றும்.
அங்கு மனம்! புத்தி! சித்தம்! இவைகளின் தோற்றம்,
ஸித்தாகிய, ஸ்ரீபகவானத இருப்பதால், அங்கு அம்மனம்,
சர்வார்ப்பணம் ஒன்றால் பந்தநிவர்த்தியும் (பிரம்மார்ப்பண
த்தால், நாமரூப நாசமாகும். அதுவே ஜீவன்முக்தி!
இந்நிலை இயல்பாகவும், எளிமையாகவும் பெற பேச்சைக் குறை
விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)



9

பேதமான
விகாரம்!
வியவகாரம் எல்லாம்
மனதின் கற்பனையான
வேறுபாடும்! மாறுபாடும்!
ஆகுமே யன்றி ஜடசொரூப
மன்னுக்குகில்லை. மனதையே பரமார்த்தபாவனை
செய்து மனச்சஞ்சலத்தை தொலைக்கவேண்டும்

14

மனிதர்! தேவர்! ஊர்வன! நடப்பன! பறப்பன! நீந்துவன! மற்றும் தாவரங்கள்! ஆகிய அனைத்திலும், செயலற்ற ஒன்று சக்தியாய், அசைவற்றிருக்கிறது! செயலற்ற சக்தியாகிய, ஸ்ரீ பகவான், அவைகளை அசைக்கிறான்.

அதுவாகிய அவனுக்கு, நாம் அன்னியமில்லை. நாமாகிய அவனுக்கு, அது அன்னியமாயில்லை என்ற திடஉணர்வை, பெறவேண்டுமானால்! பேச்சைக்குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு


15

வித்தை என்றும், அவித்தை என்றும், பொய் என்றும், உண்மை என்றும், மஹாபாபி என்றும், புண்ணியவான் என்றும், பக்தன் என்றும், பாமரன் என்றும், இப்

**பேதம்** எல்லாம், மனமயக்கத்தின் மயக்கமே.

அப்படியே பேசிப் பேசி! பேசிப் பேசி! பேசிப்பேசி! விளக்கம் கொடுத்தும், வாங்கியும்! செய்வன வெல்லாம் வாக்கின் மாயா ஜாலமே ஆகும். இவை நீங்க, பேச்சைக்குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு



16


நமக்கு அயலாக தோன்றும், எந்த நாமரூபமும்! எந்த நாமரூபமும் அற்ற, ஸ்வயம் சைதன்யமே! அதுவே நாம்! நாமே அது! என்ற பிரம்மாண்ம பாவனையை தைலதாரை போல், அனுபவமிருந்தால் அவன்! இவன்! அவள்! இவள்! அது! இது! என்ற, (குரு சிஷ்ய பாவனை உட்பட) எல்லாம், சர்வநாசம் ஆகும். இந்த திட உணர்வைப் பெற; பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல்லற சும்மா சுகமாயிரு)

17

நில்லாமலும், ஓடாமலும், ஆடாமலும், அசையாமலும், எங்குமாய்! ஏகமாய்! எதிலுமாய்! எல்லாமாய்! ஆகாயம் போன்று! ஊசி நாட்ட இடம் இல்லாமல், சர்வ வியாபகமாய், உள்ளது, அது ஒன்றே! அதற்கு அன்னியம் எதுவும் இல்லை! நாமும் அதற்கு அன்னியமில்லை) இந்நிலை ஸ்வய அனுபவமாக வேண்டுமானால்? பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல்லற சும்மா சுகமாயிரு!)





18 அதுவே நாம்! நாமே அது! என்ற வாய் ஞானம் வேண்டாம்.
நாமரூப! ஜகஜீவ, தோற்றங்கள் நாசமாகி,
எல்லாம் மண்ணே பரமே மண்ணே எல்லாம்!
நாம் அதுக்கு, அயலாக இல்லை என்ற பிரம்மான்ம பாவனை
அனுபவ ஞானம் ஆக வேண்டுமானால்; பேச்சைக் குறை!
விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!
சொல் அற சும்மா சுகமாயிரு!

19 மனதை அசைக்கின்ற! சலிப்படையச் செய்கின்ற!
சந்தேகம், கலக்கம், பயதுக்கம், தாக்கூடிய,
மனம்! புத்தி! சித்தம்! அதன் மேலான, அஹங்காரம்
அதிகாரம், ஆதிக்கம், அபிமானம், அகராதி, உடைமை, உரிமை
முதலிய எங்கள் தோஷ குணங்களும்; அவைகள்
சார்ந்து இருக்கப்பட்ட, எந்த நாமரூப தோற்றங்களும்,
இல்லவே இல்லை என்ற நிலையில் இருப்பது ஒன்றே!
நடப்பது நலமே! என்பது சத்தியமாக வேண்டுமானால்?
வேறு எந்த சாதனையும் வேண்டாம். பேச்சைக் குறை!
விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!
சொல் அற சும்மா சுகமாயிரு!



20

மனதின் எண்ணமே கர்மாவின் செயல்! கர்மாவின் பெருக்கம்! மன எண்ணத்தின்படி, ஆடுகின்ற ஓர் கருவியே, உடல் ஆகும். ஆகவே மன எண்ணத்தை வலு இழக்கச் செய்து, கர்மாவின் செயலையும், கர்மாவின் பெருக்கத்தையும் நாசம் செய்! பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!


(சொல் அற சும்மா சுகமாயிரு.)

21

சர்வார்ப்பணத்தால், மனோ பாரத்தை குறைத்து! பிரம்மார்ப்பணத்தால், மனோ நாசம் செய்யாமல்! அது ஆத்ம ஞான **விசாரணை** ஆகாது என்பது தோவக்கியம்.

இவ்வாத்ம ஞான விசாரணையே, மனோ நாசம் ஆகும். இந்த மனம் நாசம் ஆகவேண்டுமானால்! பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு.)



13

22

எண்ணம்! சொல்! செயல்! என இம் மூன்றும், எமக்கு இல்லவே இல்லை! எப்படி என்றால், கனவின் பொருள் நனவில் இல்லை! நனவின் பொருள் கனவில் இல்லை! இவ்விரண்டும், எம் ஆழ்ந்த உறக்கத்தில் இல்லை! ஆக இம் மூன்றும், மனோ வியாபாரம் ஆகும்!

இம் மனோ வியாபாரம் கெடவேண்டுமானால்! பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு!)

23

மேலே சொன்ன, மனோ வியாபாரம் கெடவேண்டுமானால், மனோ பாரம் இறங்கும் வரை, சர்வார்ப்பணம் செய்! மனோ பாரம் இறங்கியதை, உன் அனுபவத்தில் உணர்வாய். பின் மனோ நாசம் (மரணம்) ஆக, பிரம்மார்ப்பணம் செய்! மேலே சொன்ன இவ்விரண்டும் நித்திய அனுபவம் பெற வேண்டுமானால்! பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு!)

(14)



தோஷம் என்றால்?
கலி தோஷ கோர குணங்கள்.
பாவனை என்றால்?
நாமரூப ஜகஜீவ தோற்ற
உபாசனை பாவனை!

(24) ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மல மற்றிருக்க வேண்டுமானால், இடைவிடாமல், பிரம்மார்ப்பணம் செய்!


அதுவே நாம்! நாமே அது என்ற பாவனை பண்ணும் போது, நாமரூப ஜகஜீவ தோற்றம், எல்லாம் மண் என திட உருகிடச் செய்.

எறும்பு ஊற கல்லும் தேயும்! என்ற நிலையில், உன் சாதனையால், உன் மனை நாசம் ஆகும். இந்நிலை வர பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)

(25) பபாவம் அற்ற, (எந்த தோஷமும், எந்த பாவனையும் அற்ற) ஆத்மாவாகிய பரப்பிரம்மமானது, எல்லாம் ஒன்றே என்ற அறிவு இல்லாமல், பார்ப்பவர்களுக்கு, மமதை கற்பனை, நாமரூபமாய் தோற்றும். அறிவோடு பார்ப்பவர்களுக்கு (உணர்பவர்களுக்கு) ஆத்மாவாகிய, பரப்பிரம்மமாகவும், அதுவே நாமாகவும் தோற்றும். அசைவுள்ள சமுத்திரம். அசைவு! அலை! நுரை! ஆக தோற்றும். நிஷ்தரங்க (அலையற்ற) சமுத்திரம். அமைதியின் ஆனந்தமாக தோற்றும். அலையையே, ஜக ஜீவ உலகம் என சொல்லுவார்கள். மனம் அசைவற நிற்க! பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)



(26) உனது **மனோ முயற்சியே!** வெற்றியாகும்.


உனது மனோ முயற்சியே, மனோ ஜயம் ஆகும்! உனது மனோ முயற்சியே, மனோ நாசமாகும்! உனது மன முயற்சியே, மனம் மறைந்ததாகும்! அம்மனோ முயற்சியே! முதலில் **சரணம்!** முடிவு **பிரம்மார்ப்பணம்** ஆகும்.

இவ்விரண்டும், அனுபவம் ஆவதற்கு! பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)

(27) கனவின் காட்சிப் பொருள்கள், நனவில் இல்லை! நனவின் காட்சிப் பொருள்கள், கனவில் இல்லை! ஆனால் இவ்விரண்டும், ஆழ்ந்த உறக்கத்தில் இல்லவே இல்லை. இம் **மூன்றும்** சாட்சியாகிய (ஸ்ரீ பகவானாகிய) எம் **மாயா** விளைவு நடைபெறுகிறது. ஆகவே எமக்கு அயலாக, எவையும் இல்லை. இதை உணர! பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)




௨௮ பிரம்மான்ம பாவனை செய்வதற்கு, நம் மனதிற்கு, எந்த **வருத்தமும்** இல்லை! ஆனால் வருத்தம், தோன்றுகிறதே என்றால்? **நாமே** ஜக ஜீவ, உறவு சுற்றம், நட்பு இவைகளின், பழக்கமும் வழக்கமும் தொற்று நோயாக, பற்றிக் கொண்டதால், வருத்தம் தோன்றுகிறது. இவ்வருத்தம் போக வேண்டுமானால்! சர்வார்ப்பணமும்! அடுத்து பிரம்மார்ப்பணமும்! தொடர்ந்து செய்தால், இவ் வருத்தம் ஒழிந்து நாசம் ஆகும்! அதற்கு பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு

௨௯ பாடம்! படிப்பு! பட்டம்! பதவி! பணம்! வேண்டாம். குற்றம் குறை! பேதம்! தோஷம்! நீங்குவதற்கும்; நீக்குவதற்கும்! உள் ஆழ்ந்த, அனுபவ கல்வி வேண்டும். அதுவே அனுபவ அறிவாகும். அதுவே நாம்! நாமே அது என்ற ஆத்மநாமே ஆகும். இதை பெற! பேச்சைக் குறை விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு



(30)

குறையில்லாத பிரம்மமே ஸத்தியம்! நீ கண்ணால் காணும்,
**நாமரூபம்!** காதால் கேட்கும், அந்த (வார்த்தைகளும்)
நாம ரூப குண பேத, விகார விவகாரமும் பொய்யே!
பரிபூரண நிறைவான பிரம்மமே ஸத்தியம்! மனதால்
எண்ணுவதும்! அதுபற்றி விளக்குவதும், சுத்தப் பொய்யே!

**மன** நிறையால், மறையாத பிரம்மமே, ஸத்தியம்!
மற்றும் அனைத்து தோற்றங்களும் சுத்தப் பொய்யே!
இதை உள்ளபடி உணரவேண்டுமானால்! பேச்சைக் குறை!
விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

சொல்வற சும்மா சுகமாயிரு

(31) **நாமரூப** ஜகஜீவ, பொருள் தோற்றமே! அதை எனதென்பதும்,
உடல் **நாம்** என எண்ணும்! தேகாத்ம புத்தியும்,
ஜகவாச தோஷ பழக்க வழக்கம் என, அனைத்தையும்,
தள்ளுவதாயாக எல்லாம் பிரம்மம்! பிரம்மமே
எல்லாம்! அதுவே நாம்! நாமே அது! என்று ஏகமாக,
கலங்காமல் தியானம் செய்! அதற்கு, பேச்சைக்குறை!
விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு



(18) ஓர் நண்டு என்ற ஒன்றை, திரும்ப திரும்ப, ஓர் பாத்திரத்தில், போட்டால் அது, அவசியம் கால் ஓய்ந்து, பாத்திரத்தினுள், கிடந்தே ஆகும். ஆக வேண்டும். அதே போல் உன் மனமும் உன் தடையற்ற அப்யாசத்தால் உன்னுள் நிச்சயம் நின்றுவிடும். இது ஸத்தியம்.

(32) சர்வ சதாவும், சலிப்படைகின்ற, அலையும் **மனம்** அலையாமல், இருக்க வேண்டுமானால், யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்! யாமே எல்லாம்! எல்லாம் யாமே! என, எந்த விநாடியும், **தைலதாரை** போல்! தியானம் செய்வாயாக! உன் எண்ணம்! சொல்! தர்மங்களில்! உன் மனம், மெள்ள! மெள்ள! மெள்ள! மெள்ள! அசைவற நிற்கும்! இதன் சாதனை! பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு

(33) முன் சொன்ன நிலையில், இடையறாது தியானம் செய்தால், நண்டை அளந்த நாளி போல்! உன் மனம், **யத் பாவம் தத் பவதி** என்ற நிலையில், உன்னுள்ளேயே, அசையாமல் நின்றுவிடும். இங்கு சலிப்பு! அயர்வு! சோர்வு! சலனம்! சந்தேகம்! கூடாது. இந்த அனுபவம் பெற! பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு!



(19)

கொடுத்ததை வாங்குகிறான். வாங்கியதை, கொடுக்கிறான்: கொன்றதைத் தின்கிறான். தன்னைத் தின்றதை கொல்கிறான். ஆகவே இவ்வுலகம், ஓர் பற்று வரவு தீர்க்கும், நாடக மேடையாகும். ஆகவே, புண்ணிய பாபம், பகிரப்படுகிறது. தொடரும்.

(34)

மேலே கூறிய நிலையில், தன்னுடைய ருது, அப்யாசமும் செய்பவர், **வைராக்யம்** (பஞ்சமஹா பாபங்கள்! முன் செய்திருந்தாலும்) சந்தேகம், கவலை, பயம், வேண்டாம். அவசியம், ஜீவன் முக்தி பெற முடியும்.

காரணம்?

கொன்றதை கொல்கிறான்! கொன்றதால் கொல்லப்படுகிறான்

விளக்கங்களுக்கு முடிவுடை இது.

இதை உணர்வு பூர்வமாய், உறை வேண்டுமானால்! பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு

(சொல் அற சும்மா சுகமாயிரு)

(35)

மாயாவோ! அஹங்காரமோ! மனம் புத்தி சித்தமோ! கருவி கரணங்களோ! கர்மாவோ! கர்மாவின் குணமோ! இவை அனைத்தும், இருந்த ஆலும் **நாமரூப** ஆக ஜீவ தோற்றங்களும்: இவைகளின் தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவுக்கு காரணமான, ஈஸ்வர அதிகாரண சூட்சும கர்த்தாக்களும்; எந்த நாமரூபத்துடனும் இல்லை.

இதை உண்மை உணர்வுடன் உறை! பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)



ஸ்ரீமத் பகவத்கீதா (20) வாசகம் சொல்வதாவது:– நீ பாபிகளுக்கெல்லாம் மஹா பாபியாக இருந்தாலும் சந்தேகம் கவலை பயம் வேண்டாம். ஆகிய,

# ஞானம்

ஓடம் தருகிறேன். பிறவிக்கடல் கடந்து பிறவா நிலை ஜீவன்முக்தி பெறலாம் என்று ஸ்ரீ பகவான். தொடரும்.

(36) நமக்கு **அன்னியம்** ஜக ஜீவ, மற்றும் பொருள்கள் **ஸம்பந்தங்கள்** எதையுமில்லை! எல்லாம் நாமே! நாமே எல்லாம்! எல்லாம் **ஒன்றே!** என்ற, **திட** உணர்வு பெற்றவனே, ஞானியாவான். இந்நிலை சிவ அனுபவம், பெற வேண்டுமானால்! பேச்சைக் குறை விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)

(37) மேலே சொல்லும், உறுதிநிச்சயம் பெற்றோனுக்கு **ஸாதக் சாதனம்** தனியே இல்லை! அது தேவையும் இல்லை! காரணம், அவன் பிணம் போல், சஞ்சாரம் செய்பவனையும்! கிடைக்கும் உணவை, நாய் போல் உண்பவனையும்! பார்ப்பதில், விழிகண் குருடு போலும்! விகார, விவகாரம் அற்றிருப்பான். அவன் இருந்தும் இல்லாதவனே! அவனிடம் பேச்சு குறைவாயிருக்கும்! எதையும் விட்டுக்கொடுத்து, நலமென, ஏற்றுக்கொள்வான் பொறுமையின் சிகரமாயிருப்பான்!

(அவனே சொல் அற சும்மா சுகமாக இருக்கப் பட்டவன்)



(21)

எல்லாம் நீயே!
" உன்னால்!
" உனது என்ற
சர்வார்ப்பணம் உறுதி
நிச்சயம் ஆனால், பந்தமா
பாசகம் நடைபெற்றி
ருந்தால் அது பஸ்பமாகும்.
நடைபெறவேண்டிய, விதி
இருந்தால், தடுத்து நிறுத்தவோ
மாற்றி அமைக்கவோ, மாயாவும், மனமும், இணைந்து
செயல்படும்.
தொடரும்.

(38) ஜீவன் முக்தி அடைந்த, ஓர் ஞானி, கருங்கல்லைப் போலும்! பட்டகட்டையைப் போலும்! எப்பசையும்! எந்த அசையும்! அற்றிருப்பான்! விஷ்வசத்தால், அவன் தூயம், சஞ்சாரம் செய்தாலும். பசும் பால் போல், தூய வெண்மை, உள்ளமாய் இருப்பான் கோமைப்பால் ஒன்று தான் தன்னில் கலந்த, அவத்தை வெளியில் காட்டாது அதேபோல், ஓர் ஞானி, ஜகவாசனை தோஷங்களை, தன்னுள் அடக்கி, ஜீரணம் பண்ணியவனாய், தான் நிர்தோஷியாய், நிச்சலனாய் இருப்பான்! இந்நிலை அனுபவம், பெற வேண்டுமானால்! பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு!

(39) ஜன்ம ஜன்மாந்திர வாஸனையானது, சாமான்யமாக போகாது தான். பரமார்த்திகம் என்ற, எண்ணம் இருந்தாலும், துவைதம்! சாமான்யமாக மறையாது. அதற்கு முதலில், சர்வார்ப்பணமும்! முடிவில் பிரம்மார்ப்பணமும்! அதி சிரத்தையுடன் செய்தால் துவைதம் நாசம் ஆகும்! மேலே சொன்ன இரண்டு அப்யாசமும், அனுபவம் ஆவதற்கும். துவைதம் நாசமாவதற்கும்! பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு!



(22)

இவ்வுலகமே **மாயா**வும்! **மனமும்!** இணைந்து நடத்தும் ஓர் மாயா நாடகமாகும்! இதன் கர்த்தா ஸ்ரீ பகவான் ஆகும். ஆகவே நடைபெற்ற கர்மாவின் சந்தேகவஸ் பயம் வேண்டாம்.

தொடரும்.

(40)

முதலில் சர்வார்ப்பணையும்! முடிவில் பிரம்மார்ப்பணையும்! தைவதரை போல் செய்து வந்தால் மனம் **சகஜ** இயல்பாக ஆத்மாவில் நிலை பெற்று, நின்று விடும். அப்படி அசையாமல் நின்றதுவே மனம் மாண்ட (மகாத்மா) நிலை! மனதை மாய்க்க, மனது ஒருமையுடன், அவ்விரு அப்யாசமும் தொடர்ந்து செய்வாயாக. அப்படி அப்பியாசமும் இரண்டும் உனக்கு இயல்பாக அமைவதற்கு/ பேச்சை சுருக்கு! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு!)

(41)

ஆகவே, எல்லாவற்றிற்கும் அதீதமான **அகண்ட** பரம்பிரம்மமே **நாம்/நாமே** அகண்ட பரப்பிரம்மம்! என்ற **பிர** பாவனையை! இடையறாது, செய்து வந்தால், மனதின் இயல்பான குற்றம் குறைகளின், கருவுற ஒழிந்து, நாசம் ஆகும்! இந்நிலையில் **பேதம்** இல்லாத பிரம்மஞானி நீயே ஆவாய்! என்பது சத்தியம். குற்றம் குறை! பேதம்! நீங்க வேண்டுமாயின்/ பேச்சை குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு!)



நடைபெறுமோ? (41)
என்ற சந்தேக,
கவலை பயதுக்கமும்
வேண்டாம். யத்பாவம்
தத் பவதி! இங்கு உன்
ஸத்யபாவமே, உறுதி
ஆனால், பிரம்மார்ப்பணத்தால்
முடிந்தது.

அவசியம் நீ ஜீவன் முக்தனாவாய்!
இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

(42)

உறவு! சுற்றம்! நட்பு! இவைகளை நினைக்காமல் வார்த்தை குறையும்! ஆரம்பத்தில், சுற்று தனிமையை நாடு! அந்நிலையில் சுற்று **மனோபயம்** வருவது இயல்பே! அது சமயம், சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! இடையறாது செய்தால், மனோபயம்! கலக்கபயம்! துக்கபயம்! படிப்படியாக விலகும். **குற்றபய** உணர்வை நீக்கவேண்டு! பேச்சைக் குறை! சகித்துக் கொள்! விட்டுக் கொடு! பொறுமையாயிரு!


சொல் அற சும்மா சுகமாயிரு!

(43)

**நாமரூப** சரீராதிகளும், அது சம்பந்த பொருள்களும், நானும் அல்ல! நம்முடையதும் அல்ல!

நாமரூபம் நீக்கிய நிலையில் எல்லாம் பிரம்மமென்றும், அதுவே நான் என்றும், பாகமும், பிரிவினையும், உண்டு மண்ணும், எந்த பொருளும், நானும் அல்ல! நம்முடையதும் அல்ல! எல்லாம் பிரம்மமயம் என்றும் இடையறாது, தைலதாரை போல் சிந்தை செய்தால் **மோஹமும்**! மோஹத்தால் வந்த **சோகமும்** நாசமாக வேண்டுமானால்! பேச்சைக் குறை! சகித்துக் கொள்! விட்டுக் கொடு! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு!



44

திடமான விவேகம் உள்ளவன், தன் மனைவியன்றி! பிற பெண்களை தீண்டவும்! எண்ணவும் மாட்டான்! வேறு காலங்களில் மோகம்! காமம்!

கருப்பையில், அவயவங்களை, எண்ணமாட்டான். நம் வினையின்படி, கருவி கரணங்கள்! அசைகின்றன!

அது நானும் அல்ல! நம்முடையதும் அல்ல! ஆகவே,

இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! எனும் தேசசை வந்திருப்பான்!
தேவையற்ற வார்த்தைகளை, எண்ணாமலும், பேசாமலும் இருப்பான்.
(சொல்லற சும்மா சுகமாகவே இருப்பான்)

45

நாமரூப! ஜகஜீவ, தோற்ற எண்ணம்
இல்லாமல், இருப்பதுவே, ஜீவன் முக்தி ஆகும்.
மேலே சொன்ன, எண்ணம்! இருக்குமாகில்,
அதுவே பந்த பாசம்!
மேலே சொன்ன எண்ணம் இல்லாமல், இருப்பதுவே,
நிஷ்டையும்! அத்வைதமும்! ஆனந்தமும் ஆகும்!
மேலே சொன்ன மூன்றும், ஜீவன் முக்தியும்! பெற வேண்டுமானால்
அடங்கு! அடக்காதே! பேச்சைக் குறை!
விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!
(சொல்லற சும்மா சுகமாயிரு!)



(45) பிரம்மான்ம பாவனையை, அப்யசித்தை! வைராக்கியமுடன், செய்தால்; அதன் கருணையால் ஸ்ரீ பகவான் கிருபையும்; ஸ்ரீ ஸத்குரு பரிபூரண கிருபையும். இன்னது கிடைக்கும். அதுவே ஸத்குரு. அதுவே ஸ்ரீ பகவான்! இது ஸத்தியம்!

(46) **மறைந்தான** மாயை என்றும்! அவித்தை என்றும்! சொந்த பந்தம் என்றும்! அவைகளை நீக்கி நாம் பெறும் ஜீவன் முக்தி என்றும்! பந்தப்பட்ட ஜீவன் என்றும்! போக கர்த்தாக்களாகிய ஈசன் என்றும்! இவை அனைத்தும், மனதின் **மனமே** தவிர, வேறொன்றுமில்லை, என்று தெளிந்து இவைகள் மறைய வேண்டுமானால்! பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு!)

(47) பிரம்மான்ம பாவனையை, இடைவிடாமல் செய்து வந்தால்; ஸ்ரீ பகவான் கிருபையினால், வினைநாசமாகும்! ஸ்ரீ ஸத்குரு கிருபையினால், மனோநாசமாகும்! எப்படி என்றால் விறகு தீர்ந்தவுடன், அதைப் பற்றிய, அக்கினி எப்படி, சாந்தி ஆகுமோ, அதேபோல், பக்தியின் அக்கினியும், ஞானக்கினியும்! வினையையும்; மனதையும்; காலி செய்து, ஜீவன் முக்தியை கொடுக்கும் அதைப்பெற! பேச்சைக் குறை, விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு!)



(26) ஸ்ரீபகவானின் நாமரூப சிருஷ்டியை, நான் எனது என, புத்திப் பகுத்தல், பந்த வினையை! ஸ்ரீபகவானின், சர்வார்ப்பணத்தால், வினைகள் நாசமாகும்! இதனால் தாஸ சிரமங்களனையும் தொடரும்.

(48) லௌகீகத்திற்கு, புண்ணிய பாபம் உண்டு! தெய்வீகத்திற்கு, சத்திய தர்மம் உண்டு!

இவ்விரண்டுமே வாஸனா (மனோ வேதனை என்ற அசைவு) தொடர்புதானே. ஆனால் பரமார்த்திகத்திற்கு, மனோ அசைவு தொடர்போ, எதுவும் இல்லை. ஆகவே அந்த நிலையில், பட்டகட்டையாகவும்! குந்துக்கல் போன்றும்! அசைவற இருப்பதற்கு! பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு!)

(49) வேதம்! சாஸ்திரம்! புராணம்! இதிகாசம்! விதிமுறை! கட்டுப்பாடு! இவைகள் அனைத்தையும், சித்த சுத்தியின், நிமித்தமேயாகும். சித்தம் சுத்தமானால், சித்தமே! சிதம்பரம் ஆகும். சிதம்பரமே! ஆத்மா என்ற பரப்பிரம்மமாகும்! இதன் அப்பியாசம் சர்வாத்ம பாவனையாகும். சர்வாத்மபாவனை பிரம்மார்ப்பணத்தால், சாத்தியமாகும். இந்நிலை பெற வேண்டுமானால்! பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு!)




ஸ்ரீ ஸத்குரு அருளும், மஹாவாக்கிய மான, பிரம்மார்ப்பணத்தால் **மறை** பாரம் குறைந்து குறைந்து, மறைநாசம் ஆனதும், ஸ்ரீ பகவான் கருணையினால் வினைநாசமாகி! ஸத்குரு கருணையினால் மறைநாசமாகி விட்டால்! அங்கு ஜீவன் முக்தி என்பது ஸத்தியமே! முடிந்தது.

(50) தாவத்தின் கற்பனையும் இல்லை. அக்கற்பனையால் வரும், நாமரூப காட்சி இல்லை. ஜகஜீவ, சரீர தேகங்கள், நாமரூபமாக இல்லாமையினால். அதை தொடரும், பவபந்தம் என்னும், புண்ணிய பாபம் இல்லவே இல்லை. இருப்பதாக மான **மாயா**! இல்லாமையினால், சகல செய்கையும்; மாயா மனமும்; இல்லவே இல்லை. அப்படியானால், அங்கு இருப்பது ஒன்றே! நடப்பதும் நலமே! இவைகள், உன் ஸ்வய அனுபவம், ஆக வேண்டுமானால், பேச்சை குறை விட்டுக்கொடு! சகித்துக்கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற அம்மா சுகமாயிரு)

(51) **நாமரூப** ஜக ஜீவ சொரூபங்கள்! எவையும் உண்டாகவில்லை! அப்படி உண்டாகாதது, இப்படி இது இருக்கிறது! என எப்படி சொல்ல முடியும்?

(52) எந்த பொருளாவது, **எங்கேயாவது**! இது **இப்படி** இருக்கிறது என்று, சொல்ல ஒரு மார்க்கமும் இல்லை! இதன் பொருள் என்ன வென்றால்? ஒரு பொருள், இருந்தால் அல்லவோ, இது இப்படி இங்கு இருக்கிறது



என சொல்ல முடியும்? அப்படி ஒரு பொருள் எங்கேயும் எப்படியும், இருப்பதாக தெரியவில்லை.

ஆச்சர்யமாக இருக்கிறதா?

இதை கவனிக்கவும்:— காலா தீத பர சொருபமானது,


(A) நாம / ரூப / குணம் / குறி / காலம் / தேசம் / வர்த்தமானம் / மனம் / வாக்கு / காயம் / ஆகிய இந்த **பந்தம்** இல்லாத, இப்படி உள்ளது என்று, வாக்காலோ வரியாலோ விளக்க முடியாத **ஒன்று** ஆகும். அதை உண்டு என்றும்; இல்லை என்றும்; சொல்வதற்கில்லை!

(B) ஸ்ரீ மஹான்களின், அனுபவ வாக்குப்படி, அந்த ஒன்றை, தற்காலிகமாக, உபயோகம் அற்ற, **மண்** என வைத்துக் கொள்வோம்!

(C) அதன் நடுவாகிய, **மாயாவை** / வாக்கிய விளக்கத்திற்காக, **ஜலம்** என வைத்துக் கொள்வோம்.

(D) இம் மண்ணும் / ஜலமும் / சேர்ந்து இணைந்த தன்மையால்,

**களிமண்** என, ஓர் தோற்றம் உண்டானது!





மண்ணிலும் உருவம் இல்லை. ஜலத்திலும் உருவம் இல்லை!
மண்ணும் ஜலமும் சேர்ந்ததால், களிமண் என்ற தோற்றம்
உண்டானதே தவிர, அதிலும் உருவம் இல்லை! ஆனால் அது,
உருவம் தோன்றுவதற்குரிய, **பக்குவம்!**
வந்து விட்டதை, சொல்லலாம்!

(E) இப்பக்குவமானது, **பரமும் மாயாவும்!**
சேர்ந்த நிலையால், **ஒன்றாகும்** (இங்கு இரண்டில்லை)
அது **களிமண்!** என ஒன்றாகும்!

(F) மண் (பரம்) அசையாது, எதையும் அசைக்காத ஒன்றாகும்
பசைபோன்ற
ஜலம் (மாயா) அசையும், எதையும் அசைக்கும் ஒன்றாகும்.

(G) இந்த மாயாவானது, பரத்துடன் இணைந்த தன்மையால்,
மாயாவின் அசைவானது, பரத்தையும் அசைப்பது போல்,
ஓர் தோற்றத்தை உண்டாக்கியது! (உண்டாக்கமேயும்)
இம்மாயாவே ஆகாயம் ஆகும்! இம்மாயாவாகிய,
ஆகாயத்தினுள்! வாயு! அக்கினி! ஜலம்! மண்ணும்! அடங்கும்




(H) முன்பு சொன்ன, களிமண்ணினுள், வாயு! அக்கினி! ஜலம்! மண்ணில்! அனைத்தும் அடங்கும். இப்போது, இக் களிமண்ணை, அனைத்து கோள்களையும், இந்த பூமியையும், உள் அடக்கியதாகும்!

இப்போது, இக்களிமண் **பலபல உருவம்!** உண்டாக்குவதற்கு, தயார் நிலையில் உள்ளது. இதில் ஓர் ரகசியம், எப்படி அமைந்திருக்கிறது என்றால்?

**மாயா!** ஓர் தோற்றத்தைத்தான், உண்டாக்க முடியுமே தவிர, பலபல **உருவங்கள்!** உண்டாக்க முடியாதென்பதே சத்தியம்!

(I) ஆகவே, இம்மாயாவானது, தன்னுடைய மற்றோர் வடிவத்தை எடுத்துக் கொண்டது. அதுவே மாயாவின் மைந்தன், **மனம்** ஆகும்.

இங்கே, மாயாவின் மற்றோர் சிருஷ்டி, மரம், செடி, கொடி, புல், பூண்டு, என்ற தாவர வர்க்கங்களாகும்.




நாம் ஆத்மாவே! (31)
நாம் ஸ்ரீபகவானே!
நாம் பரமாத்மாவே!
நாம் பரப்பிரம்மமே!
நாம் பரம் பொருளே!
என ஐயம் திரிபுற
எவ்வித சலனமுமின்றி,
தெளிந்த நிலையில் அனுபவம் கூடி ஆனந்தமாயிருப்பது **அறிவு!**

இவை, சஞ்சாரம் செய்யாத, ஓர் **உயிர்** இனம் ஆகும். இது ஓரறிவு உள்ளதாகும். இவ் ஓரறிவும் **வாசி** ஒன்றே ஆகும்! இம்மாயாவின் சிருஷ்டியை, மாயாவை உடைய ஸ்ரீபகவானின் சிருஷ்டி என்றும் சொல்லலாம். (சொல்லப்படுகிறது) இயற்கையே ஸ்ரீபகவான்!

(J) இங்கு ஸ்ரீபகவானை இயற்கை என, (ஸ்ரீபகவானே இயற்கை) முன் சொன்ன, ஐந்து பஞ்சபூதங்கள் கிரியும், சிருஷ்டி செய்து, அவற்றிலிருந்து விளையாடுவதற்கு, நடப்பன! பறப்பன! ஊர்வன! நீந்துவன! அசையும் கிருமி கீடகம்! அனைத்தையும் சிருஷ்டிக்கான். இவைகள் அனைத்திலும், தாம் அந்தர்யாமியாக, சர்வ வியாபியாக, **அறிவாக** இருக்கிறான் ஆனால் இயங்குவதில்லை. இவ்வுயிர்வகைகளிடம் மனமில்லை. (அறிவுக்கு இருப்பு தன்மை! மனதிற்கு இயக்கு தன்மை!)

(K) நடப்பன என்பதை, முதன்மையாகக் கொண்டு, அதில் **மனிதனைத்** உண்டுபண்ணிவிட்டு,



சர்வ சுதாவும் சஞ்சலமும், சலிப்பும், சந்தேகமும், குற்றம் குறை உணர்வும், பேத உணர்வும், விருப்பு வெறுப்பும், கலி தோஷ கோர குணங்களை

(32)

வலிய ஒற்றுக் கொண்டு அவதியுறுவது மனம்!

தம் அம்மாவிடமிருந்து பிரிக்கிறான்.

இம்மனிதனிடம் மட்டுமே, இருப்பும்! இயக்கமும்! உண்டு.

இருப்புத்தன்மை, அறிவு ஆகும்! இயக்கத்தன்மை மனம்! ஆகும். (மனதின் இயக்கம் நின்றால், அறிவு பிரகாசிக்கும். என்பர் ஞானிகள்)

(L) மாயா! ஸ்ரீ பகவான் வசம் இருக்கிறது.

மனதின் வசம், மனிதன் இருக்கிறான்.

முந்தையது உண்டாக்குவதற்கு! பிந்தையது விளையாடுவதற்கு!

பரத்தில் இருந்து வருவதே, உண்டாக்குவதாகும்!

விளையாட்டு முடிந்தால், அது பரத்தில் சென்று விடும்!

(அது திரும்பவும் விளையாட வராது)

(M) ஸ்ரீ பகவானே, மாயாவை வைத்து சிருஷ்டிக்கிறான்.

ஸ்ரீ பகவானே மனதை! வைத்து விளையாடுகிறான்.

சிருஷ்டிக்கு ஏக குணம் போதும்! விளையாட பல குணம் வேண்டும்.

நான்! எனது! என்றால்! இவற்றால், சம்சாரம் உண்டாகிறது!

ஸத்வகுணம் ஒன்றால், ஆனந்தம் உண்டாகிறது!




உ

அனைத்து ஜீவ கோடி (ஓம்)
களிலும், நாமே
நிறைந்திருக்கிறோம்
என்றும், ஐஸ்வராதி
களிடம் மயக்கு மற்றும்,
எந்த வல்லமைகளும்
இல்லாமல், சகலத்து
க்கும், சர்வசாட்சியாய்
ஆனந்தபரனாய் இருப்பது:- பேரறிவு!

N

இனி நாம ரூப குண சம்பந்தம் காண்போம்.

மண்! மலை (கல்) ஜலம்! மரம்! செடி! கொடி! புல்பூண்டு!
இவை அனைத்தும், இயற்கையின் தோற்றம்!
மரம், செடி, கொடி, புல்பூண்டு, ஆகிய தாவர வர்க்கங்கள்
உயிரினமாகவும், ஓரறிவாகவும், விளங்குவதாலும்,
சஞ்சாரம்! இல்லாத தன்மையாலும், நாமரூபம்
தோன்றியும்: அது! அதுவாகவே! இருக்கிறதேயன்றி,
தாமாக (தோற்றம்) ரூபம் மாறுவதில்லை!
ஆகவே அவைகளுக்கு நாமம் ஒன்றே பொருந்தும்.
ஆகவே அவைகளுக்கு ரூபம் பொருந்தாது, என்பதுதே
சத்தியம்! அவைகளுக்கு ரூபம், தோன்ற வேண்டுமென்றால்,
இம்மனிதனின் ஆசை & தேவை! என்ற மனது
தோன்றுதல்களால் மட்டுமே, தோன்றும் என்ற, ரூபம்
பலவகையாக, மாற்றலாம்! மாறலாம்! மறையலாம்!
அவைகள் தானே மாறாது! மாற்றாது! மாற்ற இயலாது!
என்பதும் சத்தியமே! ஆகவே தாவர வர்க்கங்களுக்கு,
நாமம் மட்டும் பொருந்தும். ரூபம் பொருந்தாது, என்பதும் சத்தியமே!




மண்/மலை (கல்) ஜீவம், இம்மூன்றும், தாமாக ஓர் ரூபம், எடுப்பதும் இல்லை! ஏற்பதும் இல்லை!

ஆனால் இம்மூன்றற்கும் **மாயாவின்** விளையாட்டின்படி; அதன் மைந்தனாகிய **மனம்!**

**ஆசை**யினால் **தேவை**யையும்/ **தேவை**யினால் **ஆசை**யையும்! தம் **கற்பனையில்!** தோற்றுவித்துக் கொண்டு; **காரம்/ உப்பு! புளிப்பு/ இனிப்பு!** இவை முறையே, கோபம்/ அசமந்தம் (சோம்பல்)/ சந்தேகம்/ காமம் & மோகம்/ முதலிய குணதோஷங்களால் **காரசாரமாக** விளையாடிக் கொண்டிருக்கிறது.

மண்/மலை (கல்) ஜீவம்/ இவைகளை, தம் மனோமய கற்பனையால், தேவைகளையும்/ ஆசைகளையும்/ பெருக்கிக் கொண்டு, பொன் (பணம்) அனைத்து, பாத்திர, பாண்டம், பண்டம், நாமரூபம் பெறச் செய்தது, மனமோகர, மண் அல்லவா!



கண்ணில் காணும், அந்தந்த நாமரூபமும் **நாமே** தோன்றியதல்ல! தேவையும் & ஆசையும்! மனதில் தோன்றி அம்மனம், தாவம் என்ற **வினை** கருவியால், உண்டாக்கப்பட்டதேயன்றி, அவை நாமே உண்டானதில்லை!

அந்த நாமரூப பொருள்கள்! நாங்கள் இப்படித்தான் இருப்போம் என்றோ, இப்படி ஆகமாட்டோம்! என்றோ, நாங்கள் இன்னாருடையது! என்றோ, இன்னார்தான் வேண்டும், இன்னார் வேண்டாம்! என்றோ, சொன்னதும் இல்லை! உணர்த்தியதும் இல்லை! இக் **குணபேதம்!** எல்லாம், மனதுடையதேயன்றி, நாமரூபமண்ணுடையதல்ல!

**நாமத்தால்!** தோஷ குணங்களும்! **ரூபத்தால்!** நானாவித ரூப பேதங்களும்! உண்டானதும், மனதுடையதேயன்றி, நாமரூபமண்ணுடையதல்ல!

ஆகவே நாமரூபத்தால், தோஷ குணங்களும், அக்குணங்களால், புண்ணிய பாபமும், அப்புண்ணியபாபத்தால், ஜனன மரணமும், நேர்ந்திறதென்று, ஸ்ரீமஹான்கள் சொல்வார்.



# முடிவு

இப்படி, மறைமைய கற்பனையால், தோற்றப்படும், இந்த
நாமரூபம் அனைத்தும், தோற்றம்! இருப்பு! மாற்றம்!
மறைவு! என்ற நான்கிலையும் பின்னப்பட்டிருக்கிறது.
ஆகவே, எந்த நாமரூபமும் **நிலையானதல்ல!**
**தாமானதும்** அல்ல! மாறி மறையவதே!
ஆகவே இது இப்படி இருக்கிறது! இது இதனால் ஆனது!
இது இங்கேதான் இருக்கும் / இருந்தது என்று சொல்ல
முடியாது! சொல்லக்கூடாது! சொல்ல இயலாது!
இந்த நாமரூபமும்! அருள் குறை தோஷமும்! மனதுடையதே!
இதற்கு வேறு யாரும் பொறுப்பல்ல.

இந்த நாமரூபங்களே, தேவையாயும், ஆசையாயும்,
தோற்றங்களை, உண்டாக்கி வைத்துக் கொண்டு
**போட்டி & பொறாமையால்!**
நான்! என்னுடைய! எனது! என அஹங்கார, அதிகார,
அபிமானங்களால்! உரிமையும், உடைமையும், பாராட்டுவதால்,
தான் அண்ணிய பாவ தோஷங்கள், இம் **மனதை**
பிடிக்கின்றன என உணர்ந்தால் போதும்!



**மாயா** (37)

தோற்றத்தை மட்டும் உண்டு பண்ணும்!


**மனம்** அத்தோற்றத்தை, நானாவித, நாமரூபம்! உண்டு பண்ணி, அவைகளுக்கு குணங்களை! உள்ளே புகுத்தும்! தொடரும்.

காலாதீத பரசொரூபமும்! மாயாவும்! இணைந்து விளையாடுகிறது என்பதே சத்தியம்! இவ்விளையாட்டின் தன்மை, எப்படி இருக்கிறது என்றால்?

**நாமரூபம்**! இவைகளைக் கொண்ட, நானாவித **ஜக, ஜீவ, பொருள்** தோற்றங்கள் எல்லாம்! **மாயா**! வினுடையதாகும்!

இத்தோற்றங்கள், அனைத்திலும், தேவை, ஆசை, என்ற பின்னலைப் போட்டுக் கொண்டு; நான், என்னுடைய, எனது, ஏன, குண தோஷங்களைப் புகுத்தி, காரசாரமாக, விளையாடுவது, **மாயா** வினுடைய மகத்திய, **மனதுடையதாகும்**! இவை அனைத்தும் தெரிந்துக் கண்டு, பணியை நீங்க வேண்டுமானால்; பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு!



(38)

அப்படி குணங்களோ
புகுந்திய மனம்
அந்த நாமரூபங்களோ
உடைமை! உரிமை! என்ற
நியமில் நான்! எனது!
என சொந்த பந்த பாச
பிணைப்பை உண்டுபண்ணி
கொண்டு புண்ணியபாபங்
களுடன் விளையாடிக் கொண்
டிருக்கிறது. அதையே ஸம்சாரம்
என பேசப்படுகிறது. நான்! எனதை! விட்டால் அந்த
ஸம்ஸார விருக்ஷம் நாசமடையும்! முடிந்தது.

(53) **நாமரூப பிராந்தி!** மயக்கம்,


உன் மனதை, வெகு காலமாக பற்றி இருக்கிறது.
அப்பிராந்தி மயக்கம், ஓய வேண்டுமானால், கண்ணில் (மண்ணாக)
காணும், அனைத்தையும் பிரம்மமாக, பாவனைபண்ணு!
உன்னுடைய **உடலையும்!** உடைமைகளையும்!
(மண்ணாக) பிரம்மமாக பாவனை பண்ணு! அந்த பிரம்மானந்த பாவனையில்,
நீயே பிரம்மமயமானவாய். (பரமாகிய மண் ஆவாய்)
இந்நிலை, ஸ்வய அனுபவம், பெறுவதற்கு, பேச்சைக் குறை!
விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)

(54) **நாமரூப!** மாத்திர பாண்டமும்! பண்டமும்!

இவ்வில். பலவிதமாக விளங்கப்படும், எப்பொருளும், நாமரூபமாத
இவைவே இல்லை. நாமரூப, ஜகஜீவ, தேவ
தெய்வ, தோற்றங்களும், அவர்கள் இருப்பிடங்களும்,
எங்கும், எப்போதும், இவைவே இல்லை. இருப்பது ஒன்றே!
நடப்பது நலமே! இந்நிலை அனுபவமாக, பேச்சைக் குறை!
விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)




(39)

(55) உண்டு என்றால், இல்லை யென்ற மறுப்பு உண்டு.
இல்லை என்றால், அது இருந்தது என்ற இருப்பும் உண்டு.
**இல்லை** என்பதும் **உண்டு** என்பதும் கூறுவது,
**நாமரூப** வஸ்து ஒன்று இருந்தால்தான்,
அவ்வாறு கூற முடியும். இங்கு வாக்கு **மௌனம்**
ஆனால், விளக்கமும் இல்லை. விளக்கப்படும் பொருளும் இல்லை;
யென்றாகிவிடும். அங்கு நாமரூபம், அற்றநிலையால்,
இருப்பது ஒன்றே, நடப்பது நலமே, இதில் வேறு, பேச்சைக் குறை
விட்டுக் கொடு, சகித்துக் கொள், பொறுமையாயிரு,

(சொல் அற சும்மா சுகமாயிரு)

(56) எந்த விநாடியும், நாம் ஆத்மாவே, ஆத்மாவே நாம்,
என்ற பிரம்ம உணர்வுடன் இருப்பாயாக. எப்படி என்றால்,
**ஜலத்தில்** கலந்த **உப்பை** போல, **இரண்டற**
கலந்து, ஒன்றாக வேண்டும். இதுவே அகண்டா
கார விருத்தி என்று, சொல்வார்கள். இங்கு உடல் உணர்ச்சி
நஷ்டநாசம் ஆகவேண்டும். இதில் வேறு; பேச்சைக் குறை,
விட்டுக் கொடு, சகித்துக் கொள், பொறுமையாயிரு

(சொல் அற சும்மா சுகமாயிரு)



தைலதாரை போல் (40)
இடையறாத நிலை
நினைவுடன் அனுபவம்
பெறும் போது; சோகம்
சிக்கலின் குறிப்பு
உணர்வுகள் முழுமையாக
கெட்டு, ஆத்மக் கிட
உணர்வு மேலோங்கி
அதுவே நாம் / நாமே அது / என்ற உணர்வும் /
தொடரும்.

(57)

**நான் / எனது /** விடாக நிலையில் அஹங்கார அபிமான நிலையில் **நான்** என இருப்பது தூல விருத்தி என்றும், **துவைத** விருத்தி ஆகும்.

நான் எனது / ஒழுக்க நிலையில், அனைத்து ஜீவ கோடிகளையும், ஒன்றாக்கிட, உணர்வது, **சாட்சி** விருத்தி ஆகும்.

நாமரூப பேதம், முழுமையாக கெட்டு / பேதாபேதமற்று / எல்லாம் பரமாகிய மண்ணே / மண்ணாகிய பரமே / என அகண்ட பாவனை பெறுவது / **அகண்டாகார** விருத்தி என்று, அனுபவ ஞானிகள் கூறுவர்.

இதற்கு, உடல் உணர்ச்சி கெட்டு / ஆன்ம உணர்வு மேலோங்க வேண்டும். இது அனுபவம் பெற வேண்டுமெனில் பேச்சைக் குறை விட்டுக்கொடு / சகித்துக்கொள் / பொறுமையாயிரு /

(சொல் அற சும்மா சுகமாயிரு)



குறைந்து! குறைந்து! (141)
குறைந்து! குறைந்து!

**மறைந்து**
**மயமான**

நிலை பெறும்போது
நாம் பிரம்மானந்த
மயமாகி விடுவோம்.
அந்த பிரம்மானந்தம் நாம் ஆன தன்மையிருப்பு
தொடரும்.

(58)

கோடானுகோடி மந்திரங்களையும்! மற்றும் மஹா சக்தி வாய்ந்த **15** கலைகளையும்! முறைப்படி கற்றுணர்ந்து. முறைப்படி உபதேசம் செய்யும், அனைத்து குருமார்களும்!

**சாமான்ய குருவே ஆவர்!**

காரணம் :— பிறவி நோயை தீர்க்காமலும், ஜீவன் முக்தியை கொடுக்காமலும், **புண்ணிய** ஜன்மாவும்! **புனித** ஜன்மாவும்! கொடுக்காமலும், அவர்கள், சாமான்ய குருக்களேயாவர்.

புண்ணிய ஜன்மா :— போக போக்கிய, உயர்ந்த பிறவி!

புனித ஜன்மா :— ஈஸ்வராதிகளுடைய, பர முக்தி ஆகும்!

எல்லாம் ஒன்றே! அது சுத்த சிவமே! அதுவே நீ! அதுவே யாம்! நமக்கு அன்னியம் எதுவும் இல்லை! என்ற, சுத்த **அத்வைதம்!** போதிப்பவரல்ல, உணர்ந்து! நமக்கு உணர்த்தி! **அது** ஆக்குபவரே, **ஸத்குரு** ஆவர் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். அந்த ஸத்குரு தேவரின், அனுபவ போதனையாவது, பேச்சை குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு! சொல் அற சும்மா சுகமாயிரு!



நமக்கு அன்னியம் எதையுமில்லாத, நிலையில் இருப்பது (சுலி)

# அகண்ட ஏகாரமா கவே இருப்போம்.

இதை அநுபவம் பெற்ற ஸ்ரீமஹான்கள் கோடலும்

(59)

குற்றம் குறை, பேத உணர்வு, நீங்கிச் செய்வது, சிரவணம் என்ற நிலையில் **பொருந்தி** செய்வதாகும்.

அப்படி பொருந்தி செய்வதை, சிரத்தையுடன், சற்று கடினமாகு அப்யாசம் செய்வது, மனனம் என்ற நிலையில் **வருந்தி** செய்வதாகும்.

அப்படி வருந்தச் செய்யும் போது, அது ஸ்வய அனுபவமாகும். அந்நிலையில், அனைத்து நாம ரூபங்களையும், இல்லையென நாசம் செய்து, எல்லாம் ஒன்றே என, ஐக்கியப்படுத்தி செய்வது, நிதித்தியாசனம் என்ற நிலையில், **விரிந்து** செய்வதாகும்.

இம் மூன்றையும், அனுபவம் பெற வேண்டுமானால் பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)

குறிப்பு:— மேலே கூறியதில், பொருந்தி செய்வதால், **அஸம்பாவித** நிகழ்ச்சிகள் மறையும்.

மேலே கூறியதில், சிரத்தையுடன் வருந்தி செய்வதால், **சந்தேக கலக்க** பாவங்கள் மறையும்.

மேலே கூறிய நிலையில், எல்லாம் ஒன்றே என விரிந்து செய்யும் போது, விபரீத! விரோத! விசித்திர! விகார! விவகார! வீரா வேச! **குண** தோஷம் அனைத்தும் சர்வ நாசம் ஆகும்.




# அகண்டைக்கியரஸம் (43)

எல்லாம் ஒன்றாகிய ஐக்கியமாகிய வாக்கும், வாக்குக்கெட்டாததான ஓர் அகண்டானந்த சொரூபமானதென்றுணர்ந்து ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம் புரிகிறோம்

(60)

ஸத்குருவின் உபதேச வாக்கியம்; **தத்.த்வம்.அஸி!** (அதுவாகவே நீ இருக்கிறாய்) ஆகும்! அனுபவத்தைக் கொடுப்பது **அகம்பிரம்மாஸ்மி** (அதுவே நாம்! நாமே அது) மான வாக்கியமாகும்! மன சந்தேக கலக்கத்தை போக்குவது **பிரக்ஞானம் பிரம்மம்** (ஆத்மப்பிரக்ஞையோடு இரு! பரமாத்மப் பிரக்ஞையோடு இரு! நாமரூப உடல உலக பிரக்ஞையோடு இராதே) என்ற திட உணர்வாகும்!

இந்த திட உணர்வில், பெரிய சாதுகள், சந்தேக கலக்க பயமில்லாமல், வாக்கை மனதில் ஒடுக்கி! **பேச்சை**க் குறைத்து! எதையும் போதுமென்ற நிறைவுடன் **விட்டு**க்கொடுத்து இயல்பான விஷயங்களை ஏற்றுக்கொண்டு, எல்லாம் நலமே என, **சகித்து**க் கொண்டு அமைதி பெற்று, **பொறுமையே** ஆனந்தமாயும்! சிவசமாயும்! தனித்த நிலையில்; **சொல் அற சும்மா**



**சுகமாய்** இருக்கும் நிலையால், ஞானசபைக்கு: (ஜீவன் முக்தி நிலையில்) அதிகாரி ஆனபடியால், அவன் வைத்திய வாசகமானது! **அயமாத்மா பிரம்மம்!** என, அமைந்து விடுகிறது என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

(61) முக்தியின் மேல், இச்சை வைத்தால், அங்கு **பத** முக்தி வேண்டாம்! **பர** முக்தியாக வேண்டும்.

**பக்தி** நிலையில், நீ இருந்தால், நாமரூப ஜக ஜீவ சொரூபங்களை, இல்லையெனத் தள்ளி, எல்லாம் மண்ணே! **பரமே** என, உணர்ந்த நிலையால் பக்தியின் ஈஸ்வரர்களின், ரூபலாவண்யமும்! மஹிமை பிரபாவமும்! சிப்பியில் தோன்றிய, வெள்ளியின் மயக்கமென உணர்ந்து அவைகளையும் தள்ளி, எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! அதுவே நாம்! நாமே அது! என்ற நிலை பெற, மேச்சை தீருமே!

சகித்துக் கொள்! விட்டுக் கொடு! பொறுமையாயிரு!

(சொல்லற சும்மா சுகமாயிரு)



பலரிடமும் பாடம் கேட்டால்? இது சரியா? அது சரியா? இவர் சொல்வது சரியா? அவர் சொல்வது என்ன? என்ற மன ஆராய்ச்சியால், குழப்பம் தான் உண்டாகும். அனுபவம் கூடாது. காலம் விரயமாகும். அதனால் ஜீவன் முக்தியின் பெருமை தடைபடும். ஆகவே கவனம் தேவை. (45)

(62)

ரகசியத்தை விரிவாக்காதே! விரும்பி விரும்பி பேசாதே! அனுபவத்தில் நீ நிலைத்து நில்! சுருக்கச் சொல்! விரும்பி சொன்னால் **வாக்கு** விரயமாகும்!

ஸத்குரு ஒருவரைத் தவிர, ஏனையோரிடம், பாடம் கேளாதே! அப்படி கேட்டால், சந்தேக மனக் குழப்பம் உண்டாகும்! ஒரு வார்த்தைக்கு, பல பல அர்த்தம், பிரித்து பார்க்காதே! இதனால் **விகல்ப** மான துக்கம் தொடரும்! இவை நிவர்த்தியாகி, அனுபவம் பெருக வேண்டுமானால், பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக் கொள்! மௌனமாயிரு!


(சொல் அற சும்மா சுகமாயிரு)

(63)

**குற்றம் குறை** இல்லாமல், உண்மைப் பொருள் உணர்ந்த பின், மேலும் **பிற** நூல் பார்க்காதே! நீ பார்த்த நூலின், உட்புகுந்து, அனுபவம் கூட்டுவாயாக! நீ பார்த்த நூலின், உள் ஆழ்ந்து செல்! அந்த அனுபவம் பெற பேச்சைக் குறை! விட்டுக்கொடு! சகித்துக் கொள்! மௌனமாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)





(46)

மரம் இருக்கிறது.
தூண் இருக்கிறது.
மேஜை நாற்காலி இருக்கிறது.
பறவை இருக்கிறது.
கரி இருக்கிறது.
சாம்பல் இருக்கிறது.
தூசி இருக்கிறது.
அணு இருக்கிறது.
ஜீவ அணு இருக்கிறது.
**ஆத்மா** இருக்கிறது.

(64)

நவமணிகளின் தானியத்தை, எடுத்து விட்டு,
அதன் புதர்களை, (உமி) தூர எறிந்து விடுவது போல்,
**பேதம் நீக்கி** உணர வேண்டிய மெய்மையை!
**அனுபவநூல்** மட்டும்!
உணர்ந்தபின்;
வைத்துக்கொண்டு, மற்றும் அனைத்து நூல்களையும்,
தூரமாக ஒதுக்கி விட வேண்டும். அனுபவநூலில், உட
அருந்து, அதிலேயே கரைந்து மாயமாகி விட வேண்டும்!
அப்படி கரைந்து மாயமாவதற்கு! பேச்சைக் குறை!
விட்டுக்கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!


(சொல் அற சும்மா சுகமாயிரு)

(65)

உனக்கு அயலாக தோன்றும், இந்த **நாமரூபம்**
எல்லாம். மண்ணுக்கு பாண்டங்கள், எவ்விதம் அன்னி
யம் இல்லையோ! அதே போல், உனக்கு அன்னியமில்லை என,
உணர்வாயாக. எமக்கு அயலாக, எதுவும் இல்லையென்பதும்,
எல்லாம் **யாமே!** யாமே **எல்லாம்!** தையாவது
மண்ணி, மனக்கவலை நீங்கும் வரை! பேச்சைக் குறை!
விட்டுக்கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)





முன்பக்க தொடர்ச்சி (47)

மரத்திலிருந்து ஆத்மா வரை! நாம ரூபம் தான்! மாறி மாறி வருகிறதே தவிர, **இருக்கிறது** என்ற இருப்புத்தன்மை! மாறவும்! மறையவும்! இல்லை.

அந்த இருக்கிறது என்ற இருப்புத்தன்மையையே, ஸத் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

66

**ஸத்** தாக இருப்பது! **ஸித்** தாக அசைவது! அப்படி அசைவதினால், **ஆனந்தம்** தோன்றுகிறது.

அந்த ஸத்! ஸித்! ஆனந்தம்! ஆகிய மூன்றும்! தோன்றுத **ஒன்றாகும்!** இம் மூன்றையும், **அறிவின்** மூலமாக, உணர்ந்தால் மட்டுமே, ஆனந்தம் தோன்றும்! மேலே கூறிய இம் மூன்றையும்! **நாமரூபம்** மூலமாக, பின்னவிட்டு, மனோ வழியில் (உணர்ந்தவர்) பார்த்தால்; இன்பமும் துன்பமும்! மாறி மாறி தோன்றும். இங்கு ஆனந்தம் தோன்றுவதில்லை. இதை கருத்தொன்றி கவனித்தால்! நாமரூபமெல்லாம்! மாறி மறைந்து! மாறி மறைந்து! இதுவாக இருக்கிறது என்றும், அதுவாக இருக்கிறது என்றும்; **இது! அது!** என்ற பேதம்! நாமரூபத்தில்தான், உண்டாகுமே தவிர இருக்கிறது! இருக்கிறது! இருக்கிறது! இருக்கிறது எனச்



மரம் என ஒன்று; எந்தனை நாமரூபம், மாறி மாறி எடுக்கையும்; அவை அனைத்திற்கும் ஆதாரம் இருக்கிறது! இருக்கிறது! என்ற உணர்வனைத்தே

உளது ஆகும். அதுவே நாமரூபம் மெய்யே! இருக்கிறது என்பது மெய்யே!

சொல்வதில், இருக்கிறது என்ற இருப்புத்தன்மை! மாறுவதும் இல்லை! குறைவதும் இல்லை! கூடுவதும் இல்லை! அது எந்த விதமுடியும், உண்டு என்பது சத்தியமே!

உதாரணம்:- மரம்! தூண்! மேஜை! நாற்காலி! விறகு! கரி! சாம்பல்! தூசி! அணு! ஜீவ அணு! ஆத்மா!

என்ற நிலையில், தோற்றம்! மாற்றம்! எத்தனை நாமரூபம், மாறி மாறி சொன்னாலும், கேட்டாலும், வடிவடிவில் எழுதினாலும், அந்தந்த நாமரூபத்தின் பின்னால், இருக்கிறது என்பது, இருந்தே தீரும்!

அப்படியானால், நாமரூபம்தான்!

உலக நிலையில் இடம் கண்டு, நிலை கண்டு, அனுபவ (துன்பம்) இன்பம் கண்டு; மாறுகிறதேதவிர!

இருக்கிறது! என்ற இருப்புத்தன்மை மட்டும் மாறுவதும்! குறைவதும்! கூடுவதும்! மறைவதும்! இல்லை. அது அப்படியே, இருப்பதால், அந்த மாறாத இருப்புத்தன்மையை மட்டும்.



நாமரூபம் ஸத் (49)

அவ்வ. அதன் இருக்கிறது என்ற, இருப்புத்தன்மையே! ஸத்தாகும். அது மற்றொன்றாய் மாறும்போது, உண்டான அசைவே, ஸித் ஆகும். அவ்வசைவால், அறிவால் உணர்ந்திடுவதால், அது ஆனந்தம். மனதால் கண்டறிவதால், இன்பம் துன்பம் ஆகும்.

**ஸத்** என ஸ்ரீமஹான்கள் சொல்கிறார்கள்.

அப்படி ஒன்று மற்றொன்றாய் மாறும் போதும். அந்த ஒன்றாய், இருக்கும் போதும்; **நாமரூபமாய்!** இருக்கும் போதும், **அம்மாற்றத்தையே!**

**ஸித்** என, ஸ்ரீமஹான்கள் சொல்கிறார்கள்.

(ஒருநாமரூப பொருளாய், மாறாமல், அசையாமல் இருக்கும் போது, அதை ஸத் என்றும். அதேநாமரூப பொருள், மற்றொன்றாய் மாறும் போது, அம்மாற்றத்தின் அசைவை, ஸித் என்றும்; ஸ்ரீமஹான்கள் சொல்கிறார்கள்)

அப்படி நாமரூபம், ஒன்று மற்றொன்றாய், மாறும் போதும். அதுவே ஓர் நாம ரூபமாய் இருக்கும் போதும், **அதன் உபயோகம்** (அது அனுபவிக்கப்படும் நிலையை) **ஆனந்தம்** என, ஸ்ரீமஹான்கள் சொல்கிறார்கள்.

(50)



மனதை உணர்ந்தால் ஆனந்தம். நாமே பேசாத கண்டால் இன்ப துன்ப புண்ணிய பாப ஹேதம்.

நாம ரூபத்தை, உண்டு என, மனம் பற்றும் போது, அதன் இயக்க உபயோக குணம், மனதை பற்றி விடுவதால், அதுவே இன்ப துன்பமாக மாறி விடுவதால், அந்த இன்ப துன்பமே புண்ணிய பாபமாக மாறி பிறவிக்கு வழியை ஏற்படுத்தி விடுகிறது. ஆகவே நாம ரூபம் வேண்டாம் என்கிறோம்.

**அறிவு** நிலையில் இதை உணரும் போது, இருப்பு! (ஸத்) மாற்றம்! (ஸித்) அனுபவம்! (ஆனந்தம்) (இம் மனமானது **கற்பனை** விரிக்காத நிலையில், அது அறிவே ஆகும்)

அங்கு **குணதோஷம்** பின்னவிடாத நிலையில் அது ஆனந்தம் என ஆகும். (கற்பனையும் இல்லை! தோஷ குணமும் இல்லை)

முன் சொன்ன நிலையில், இருப்பு! மாற்றம்! அனுபவம்! ஆகிய மூன்று நிலைகளிலும், **மனம்** பின்னவிட்டு, நான்! எனதை! விடாத நிலையால், **சொந்த பந்தம்!** கொண்டாடும் போது, மனைவி கார பிள்ளைக்கு இல்லாமல்(?) ஆனந்தம் மறைந்து, அதுவே **இன்ப துன்பமாய்!** புண்ணிய பாபமாய் வடிவெடுத்து விடுகிறது.

**மனம் மனமாக** இருந்தால், இன்ப துன்பம். **அறிவாக** இருந்தால் அது ஆனந்தம்.



எது எதை நாம ரூபமாக கண்டாலும், அதை இது **மண்** தானே என, அறிவுபூர்வமாக் உணர்ந்துவிட்டால் நாம ரூப குண தோஷம், மனதை பிடியாதொழியும். அங்கு நாமரூபம் வலுவிழந்து போகும். அதனால் மனம் பின்னவிடாமல், மலைக்காமல் இருக்கும். (51)

# ஸத், ஸித், ஆனந்தம்


இதன் விளக்கத்தை, ஸ்ரீ மஹான்கள் வாயிலாக இவ்வாறு அறிகிறோம்.

ஆகவேதான் ஸத் என்று, இருப்புதன்மையையும்,
ஆகவேதான் ஸித் என்று, இயக்க அசைவுதன்மையையும்,
ஆனந்தம் என்று; அசைவிறவு தோன்றும், அனுபவத்தன்மையையும்,

**அகண்டமாக** இருப்பதால், இம்மூன்றையும் **பர** அம்சமாக சொன்னார்கள்.

தோன்றி இருந்து மாறி மறையும் **நாமரூபம்** இரண்டையும் **ஜட, ஜீவ,** தோற்றங்கள் அனைத்தையும், அவை மண்ணே வடிவமாக இருப்பதால், அவ்விரண்டையும் நாமரூப உலகத்தின் நல்இறவு, பரமே மித்யம் என்றும், அப்பரமே நாமேன எனவும், உணரவும் இதன் வழிமுறை/ பேச்சைக்குறை சகித்துக் கொள்/ விட்டுக்கொடு/ பொறுமையாயிரு/

சொல் அற சும்மா சுகமாயிரு




67 துவைதம் என்றும், விசிஷ்டாத்வைதம் என்றும், அத்வைதம் என்றும், இவ்விதம் என்றும், அவ்விதம் என்றும், உண்டு என்றும், இல்லை என்றும், இவ்விதமாக, வாதப் பிரதிவாதம் செய்யும் அனைத்துமே, **வாக்கு** விரயமே! அதனால் **மனதின்** தோஷமே! அதனால் இன்ப துன்பமே! ஆனந்தம் அனுபவம் இல்லை! அந்த இன்ப துன்பத்தால், புண்ணிய பாபம் என்ற பாவத் திரையை நீக்க வேண்டும் என்றால்! எல்லாம் பிரம்மமே அது நாமே என்ற, உணர்வை பெருக்கும். அகத்து, பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல்லற சும்மா சுகமாயிரு)

68 **அகண்டானந்த** பிரம்ம சொரூபமானது, **புத்தி** சொரூபமானவர்களுக்கு நாம பேத வகையாய் தோன்றும். **அறிவு** சொரூபமானவர்களுக்கு **பரமாய்** தோன்றும். பரமாய் உணர வேண்டுமானால், எல்லாம் மண்ணாக உணர்! மண்ணே பரமாகவும்! பரமே நாமாகவும் திடமாக உணர்ந்து இந்த மெய்யுணர்வு பெருகட்டும் பேச்சைக் குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

(சொல்லற சும்மா சுகமாயிரு)





69

ஆசை வற்று, அறிவு பூர்வமாக, அதுவே நாம்! நாமே அது என்று, ஸ்திரமாக இருப்பதுவே, கைவல்ய மோக்ஷம் ஆகும். இந்நிலையை ஒருவர் பெற்று விட்டால், அவர் பிறந்த, பிறவிப் பயனை அடைந்தவராவார். அவர் இங்கு வந்து, செய்வனவற்றை செய்து முடித்தவராவார். அவருக்கு துன்பம் துயரம், கஷ்டம் கவலை! **பய துக்கம்** எல்லாமே இல்லை. இந்நிலை பெற பேச்சைக் குறை, சகித்துக் கொள், விட்டுக் கொடு, பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)

70

## தன்னை அறியும் அறிவை

அறியாதவர்க்கு, ஆத்ம ஞானம் பெறாதவர்க்கு, உலகத்தில், பல பய, பல தொந்தம், விலகுவதில்லை, சந்தேக கலக்க பயம், விலகுவதில்லை, பிறப்பு இறப்பு எண்ணும், பிறவி நோய் தீருவதில்லை, **மனம்** அசையா திருப்பதில்லை. ஆணவ மயக்கமும், விரோத கலக்கமும், தெளிவதில்லை. இவை அனைத்தும் நாசமாகி, அனுபவம் பெற வேண்டுமானால், பேச்சைக் குறை, விட்டுக் கொடு, சகித்துக் கொள், பொறுமையாயிரு!

(சொல் அற சும்மா சுகமாயிரு)



## ஸத்ஸங்கம் (54)


ஒன்றுவேயே ஞானானுபவமும், ஜீவன்முக்தியும் பெறமுடியும். மற்றும் பாடம், படிப்பு, இவைகளால் ஜீவன்முக்தி பெறமுடியாது என்று நம் ஆதிசங்கரர் அவர்களுடைய அனுபவ சித்தாந்தம்.

(71)

**ஸத்குருவின்** முன்னிலையில், கேட்டுணர்ந்த பாடங்களை, **அதே அனுபவம்** பெற்ற, **ஸாதுக்கள்** ஸத்ஸங்கத்தில் தெளிவு பெறலாம். ஸத்குருவின் பாடங்கள், ஸாதுக்களின் ஸத்ஸங்கத்தில் தான் உறுதியும்! முடிவும்! அனுபவமும்! பெறமுடியும். ஏனைய எத்தனை பாடங்கள், அத்வைதமாகயிருந்தாலும், **ஒன்றை** உணர்ந்தபின், **மற்றவை** அனுபவம் தர முடியாது! தர இயலாது! அதற்கு மாறாக, சந்தேக, விபரீத, குழப்பம் தான் உண்டாகிறது என, ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்!

(A) **நிறைய கற்றல்!** பாண்டித்யமும்! பேரும்! புகழும்! பட்டமும்! புகழ்ச்சியும்! பெற்று வித்வான் ஆகலாமே! ஜீவன்முக்தி பெற முடியாது! பெற இயலாது! காமனைச் **பாரம்** ஒழியவே!

(B) சுருங்க **ஒன்றை கற்றல்!** அமைதி! சாந்தி! அடைந்து, பொறுமை! பணிவு! கனிவு! கருணை! இவைகளை பேரும்! புகழும்! புகழ்ச்சியும்! நாசமான, நிஜமாய் ஜீவன்முக்தி! அவசியம் உண்டு என, ஸ்ரீமஹான்கள் சொல்வார்.



ஸத் சங்கமே (58)
நித் ஸங்கமாகும்.
நித் சங்கம், மோஹத்தை
நாசம் செய்யும், மோஹம்
நாசமானால், மனம்
மறைந்தாகும். மனம்
மறைந்தால், அதுவே ஜீவன் முக்தி ஆகும்.


குறைவாகவும், சுருக்கமாகவும், ஒருவரியாகவும்!
கற்றும் கல்வியை கற்றுணர், பேச்சைக் குறை,
விட்டுக் கொடு, சகித்துக் கொள், பொறுமையாயிரு.
(சொல் அற சும்மா சுகமாயிரு)

(72)
வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், வேத
வேதாந்த, உபநிஷத் தத்துவங்கள் என்றறிகியில்;
ஒருமையும் இல்லை, இருமையும் இல்லை!!

# இருப்பது ஒன்றே / நடப்பது நலமே

என பாவனை பண்ணு / பாவனை பண்ணி, பரம் நாம் என ஆவாயாக.
இப்பாவனை, கனவில் அனுபவம் ஆகும் என்றால், பேச்சைக் குறை,
விட்டுக்கொடு, சகித்துக்கொள், பொறுமையாயிரு.
(சொல் அற சும்மா சுகமாயிரு)

(73) மனம், புத்தி, சித்தம், அஹங்காரம், ஆகிய
(74) இந்த நான்கில், **சித்தம்** கற்பனையாத
(75) இருக்கும் **திரம்** இவ்வாமல், பிரபஞ்சமும்
(76) இல்லை, அதில் நான், எனது, என பின்னிக்கொண்ட
(77) உடைமை, உரிமைகளால், பிணைவும், சம்சாரமும்
இல்லையென்றே சொல்லவாம்.



எண்ணத்தால், (56)
நாம ரூப உலகம்.
எண்ணத்தால் நாமரூப
உறவு, சுற்றம், நட்பு,
சர்வாரம்பணத்தால்,
நாமரூப ஜக ஜீவ
தோற்ற விரிவு அறியும்.
பிரம்மாரம்பணத்தால்
நாமரூப ஜக ஜீவ தோற்றம்
மண்ணாக முடியும். அம்மண்ணே
பரமமாகவும், பரமே நாமமாகவும் ஆக முடியும்.

சித்தமே **நாமரூப** ஜக ஜீவ சொரூபங்களும்;
" " " உறவு, சுற்றம், நட்பு, முதலிய,
சொந்த, பந்த, பாச, பற்று, பின்னலும் ஆகும். இந்த
சித்தத்தை, அறிவு பூர்வமாக உணர்ந்தால், அது
சித்தம் அல்ல (எனும்) அதுவே **ஸ்தூபர** சொரூபமென்றும்;
உணரலாம். இதைப் போலவே, மனமே (எண்ண வடிவமே)
நாமரூப, ஜக ஜீவ, சொரூபமாகத் தோன்றுகிறது. எங்கும்
சங்கல்பமே உலகம் எனும். சங்கல்ப ரஹிதமே
மோக்ஷம் எனும். சொல்வழக்கிறது. இந்த மனமே
சங்கல்ப அசைவு (நின்ற) நிலையில்! **ஸ்தூபர** சொரூபமென்று
உணரலாம். ஆகவே எம்முடைய
**ஸ்தூபர** சொரூபத்திலேயே, மனம் எழுந்து! (அம்மனத்தின்) கற்பனையால்
நாமரூப ஜக ஜீவ சொரூபங்களை, உண்மையென விளையாடி விட்டு
எம்மிடமே (மனம்) ஒடுங்கி விட்டது. எம் கற்பனையால், நாமரூப
ஜக ஜீவ சொரூபங்களையும். அவைகளை, உண்மையென
யதார்த்தமாய், கர்த்தாக்களையும், உண்டு பண்ணி. அங்கு


**ஆடாது ஆட்டமெல்லாம் ஆடி**
**பாடாது பாட்டெல்லாம் பாடி!**



(57)

இது போதும் என்ற **நிறைவுடன்** மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய இந்த நான்கு **கரணங்களையும்** எமக்குள்ளேயே லயமாக்கிக் கொண்டு எல்லாம் யாமே, யாமே எல்லாம், என **ஓர்மை** ஆவதற்கு, யாம் செய்த சாதனை, பேச்சைக் குறைக்கிறோம். எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கிறோம். எதையும் நலமே நலமே என சகித்துக் கொண்டோம். பொறுமையின் கடலென அசைவற்றிருக்கிறோம். (அதனால் சொல் அற சும்மா இருக்க முடிகிறது)

(78) அகம்பிரம்மம். ஜெகம்பிரம்மம், அகமே எல்லாம். ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை என்ற **திடமான** உள்ளத்திலேதான், ஆத்மஞானமானது ஜனிக்கும். அந்த ஆத்மஞானமானது **ஸத்குரு** கருணையினால்தான், அனுபவம் ஆகும். அந்த ஆத்மஞானமானது **தைலதாரை** போல், ஓயாமல் செய்பவர்க்கிடமே, ஸ்திரமாய் நிற்கும். அந்த ஆத்மஞானமானது




**கண்டசிவம்** என்று, ஸ்ரீ பகவான் கருணையாலும்,
**அகண்டசிவம்** என்று, ஸ்ரீ பரம் பொருள்
கருணையாலும் தான். நீயே பெற்று ஜீவன் முக்தியை!
கொடுக்கும் என்று ஸ்ரீ மஹான்கள் சொல்வர். ஆக இந்த
நான் ஒன்றே, சிவ அனுபவம் பெற! பேச்சைக் குறை!
விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!

சொல் அற சும்மா சுகமாயிரு

79

மேலே கூறிய, அகண்டான்ம பாவனையானது!
அப்பியாசம் செய்ய, எந்த வருத்தமும் இல்லவே இல்லை.
அசைவற, மனம் நிற்குதற்கு, தொடர்ச்சியாக, இப்பர
பாவனையை, செய்வாயாக. பிரம்மமே நாம்! நாமே பிரம்மம்!
என்ற **சிந்தனை**! திரும்ப திரும்ப சொல்லி
வந்தாலும், இந்த வாக்கின் தர்மம்! உனக்கு ஜீவன்
முக்தியை கொடுக்கும். இந்த நிலை பெற! பேச்சைக் குறை
விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!


சொல் அற சும்மா சுகமாயிரு



59

40

எந்த மறைப்பும் இல்லாத பிரம்மம் ஒன்றே ஸத்தியம்!
பிரம்மத்தை யன்றி, மாயாவோ! மாயாவின்
திருஷ்டியாகிய, அவித்தையான! நாமரூப
உலகமோ இல்லை.
கெட்டும் போகாத, பிரம்மம் ஒன்றே ஸத்தியம்!
கெட்டும் போகும் ஜீவனும் மறைந்து போகும்,
ஈசனும் நாமரூபமோ! சூட்சும சொரூபமோ இல்லை!
பரிபூரண சொரூபமான அறிவான! பிரம்மம்
ஒன்றே ஸத்தியம்! உண்டெனச் சொல்லவும், மெய்யும்!
இல்லையெனச் சொல்லவும், பொய்யும் இல்லை!
நாமரூப, ஜக ஜீவ தோற்றமோ! மாயா சொரூப ஈசன்
தோற்றமோ! எல்லாவற்றிற்கும் காரண
சொரூபமான, பிரம்மம் ஒன்றே ஸத்தியம். அந்த
பூரண பிரம்மமே நாம்! நாமே அந்த பூரண பிரம்மம்!
காண்பதைமற அந்த ஒன்றை உணர்!
காண்பதை மறக்கவும்! அந்த ஒன்றில் நிலை பெறவும்!
விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பேச்சைக் குறை!
பொறுமையாயிரு!
சொல்லற சும்மா சுகமாயிரு




எந்த கர்மா வினையும், (60)
ஞானம் பெற முடியாது.
கர்மாவை விடாமலின்றி,
ஞானம் பெறமுடியாது.
அனைத்து கர்மாவும், நாமரூப
சம்பந்தம் கொண்டதாகும்.
நாமரூபம், அனைத்தும் நாசம்
ஆன இடமே, ஆத்மஞானம்.
ஆகவே கர்மாசம்பந்த, பிரவர்த்தி) ஆத்மஞானம் ஆகாது.
கர்மா ஒழிந்த, நிவர்த்தி ஒன்றே ஆத்மஞானம் ஆகும்.

(81) தாவராதிதே பரப்பிரம்மமே! நீ

தர்த்தாக்களாகவும், எல்லா வற்றிற்கும், மூலமான
ஆதிசிவமாகவும், பஞ்சபூதங்களாகவும், கோடா
னுகோடி, கோள்களாகவும், அசைவன/அசையாதன,
ஆகவும், அனைத்து ஜீவ கோடிகளாகவும், நாமே தோன்றுகிறது.
அதற்கு, அன்னியமாய் எதையும் இல்லை. நாமும் அதற்கு
அயலாக இல்லை! நாமே அது என உணர்! பேச்சை குறை,
விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு!
(சொல் அற சும்மா யிரு.)


(82) எல்லா நாமரூபங்களும், வேறு! நாம் வேறு!
பிரம்மம் வேறு! என்று எண்ணும், பேத புத்தியாளது,
எல்லாம் ஒன்றே என்னும், திட நிச்சயத்தால்
தான், பேதம் ஒழிந்து, ஒன்றுபடுத்த முடியுமேயன்றி.
வேறு எந்த கர்மா உபாசனையாலும், ஒன்றுபடுத்த
முடியாது என்பதே, ஞானிகளின் அனுபவமாகும்!



(61)

தேவ தெய்வ பக்தியால், உபாசனையெல்லாம்,
சக்தியையும், வல்லமைகளையும், பேர்புகழையும்,
தருமேயன்றி, தேகம் நீங்காது. பேதம் நீங்குவதன்றி
ஆத்மஞானம் வசமாகாது. ஆத்மஞானம் ஸித்தியாகா
மல், ஜீவன் முக்தி இல்லவே இல்லை. ஜீவன் முக்தி பெற,
பேச்சைக் குறை,
விட்டுக் கொடு, சகித்துக் கொள், பொறுமையாயிரு,
(சொல் அற சும்மா சுகமாயிரு)

(83) **அஹம்பிரம்மாஸ்மி** என்ற,
அகம் பிரம்ம நிச்சயமானது, அஞ்ஞான சந்தேகங்களை
போக்கும், வைராக்யத்தின் தோஷங்களையெல்லாம்
போக்கும், ஆசை அற்று ஆன்மாவில், நிலை பெறச்
சமாதியை நாட்டும், **சம்ஸார** பந்த
தோஷத்தை, அழிக்கும், இவை நான்கும் இயல்பாக,
அனுபவ சாத்தியமாக வேண்டுமானால், பேச்சைக் குறை,
சகித்துக் கொள், விட்டுக் கொடு, பொறுமையாயிரு,
(சொல் அற சும்மா சுகமாயிரு)



62

84

பிரம்மன் என்றும், நாராயணன் என்றும், சிவன் என்றும், அவர்களுடைய, முத்தொழில்கள் என்றும், தீர்த்தம் மூர்த்தி, ஸ்தலங்கள் என்றும், ஜபதபமென்றும், தானதருமமென்றும், தேவதெய்வ சேவை என்றும், இவை அனைத்தும் **மனதை** கவர்கின்ற, ஓர் முறைமைய மயக்க பாவனையாகும். இம்மயக்கம், ஒழிய வேண்டுமானால், எல்லாம் மண்ணே, மண்ணே எல்லாம், மண்ணாகிய பாரமே, அம்பாரமே நாம், என்ற திட உணர்வை பெற வேண்டும். அதை பெற, பேச்சைத் துறை, விட்டுக் கொடு, சகித்துக்கொள், பொறுமையாயிரு.

சொல்லற சும்மா சுகமாயிரு

85

கோடானு கோடி மந்திரங்களையும், அவைகளை முறையாக, கற்று, ஓதும், குருவையும், ஒதுக்கி விடு. வாக்கு வாதம், அனைத்தையும், ஒதுக்கி விடு, அசைக்கும் மனதின் பேதகுணத்தை துற, உணர்வுகளை ஒழித்து விடு, உன் ஆன்மாவில் அசைந்திடும் பாவகம் அந்நிலை பெற, பேச்சைத் துறந்து விட்டுக்கொடு, சகித்துக்கொள், பொறுமையாயிரு.

சொல்லற சும்மா சுகமாயிரு



86


காமக்குரோதாதி, ஆறு குணங்களையும், வஞ்சகம், சூது,
பொய், முதலிய கலியுக தோஷ குணங்களையும், மது
மாது, பணம், ஆகிய கோர குணங்களையும்,
சர்வ நாசம் செய்து; நாமரூபம் அனைத்தும் மண்ணே
எனத் திட உறுதி கொண்டு; அம்மண்ணாகிய பரமே,
சத்தியம் என்றும், அப்பரமே நாம், நாமே அப்பரம்,
என்ற அகண்டான்ம பாவனை நிலை பெற, பேச்சைக் குறை,
விட்டுக் கொடு, சகித்துக் கொள், பொறுமையாயிரு,

(சொல் அற சும்மா சுகமாயிரு)

87

நிரந்தரமாயும், வியாபகமாயும், ஓரியவீமாயும்,
ஆன ஆன்மாவாகிய எம்மிடமே, அனைத்து நாம
ரூப ஜகஜீவ, தேவேந்திரம் அனைத்தும், தோன்றி,
இருந்து, மறைகின்றன, பஞ்சாரணைமான, யாமே எல்லாம்
எமக்கு அன்னியம், எதையுமில்லை என்ற அபேத
பர ஞானத்தால், எல்லாம் ஒன்றே, அந்த ஒன்றே
எல்லாம், அதுவே நாம் எனத் திடமாக உரை, பேச்சைக் குறை,
விட்டுக் கொடு, சகித்துக் கொள், பொறுமையாயிரு,

(சொல் அற சும்மா சுகமாயிரு)


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!